காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அவர்களின்

செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு. ஆஷிஸ் ராவத், இ.கா.ப.,

மா.ஆணை எண்- 688/2024 நாள்: 01.07.2024

ந.க.எண்-ப்பி2/ 10936/2024

பொருள்- காவல் - தஞ்சாவூர் மாவட்டம் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - தஞ்சாவூர் மாவட்டம் காவல் கட்டுப்பாட்டறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 03.08.2000 அன்று மறைந்த உதவி ஆய்வாளர் 500, R.கோவிந்தராஜி , என்பவரின் மகன் திரு G.சிவகுமார் என்பவரின் இளநிலை உதவியாளர் பதவியினை பணி வரண்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை- 1.அரசாணை (நிலை) எண்.80 நாள் 02.03.16 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை (க்யூ-1 ) துறை நாள் 02.03.16.

2. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/சிஎஆர்1/16 நாள் 21.12.17.

<<<>>>

தஞ்சாவூர் மாவட்டம் காவல் கட்டுப்பாட்டறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த உதவி ஆய்வாளர் 500, R.கோவிந்தராஜி என்பவர் 03.08.2000 அன்று மறைந்துவிட்டார். மேற்படி உதவி ஆய்வாளரின் மகன் திரு G.சிவகுமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 26.09.2000 அன்று மனு சமர்பித்திருந்தார். அன்னாருக்கு கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளர் பணி வழங்கப்பட்டு 16.07.2010 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு பணி புரிந்து வந்தார். இவருக்கு கணினி விவர பணியாளர் பதவியில் 16.07.2010 மு.ப பணி வரண்முறையானது செய்யப்பட்டுள்ளது. மேலும் கணினி விவர பதிவாளர் பணியில் இருந்து இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 11.05.2023 மு.ப முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமத்தினை கருத்திற்கொண்டு 01.02.16 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதி தளர்வும் தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனத்தை சம்பந்தப்பட்ட நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணையிடலாம் என பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

3) மேலும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769.சிஎஆர்1./2016 நாள் 21.12.17-ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஒருவர் கருணை அடிப்படையில் பணி நியமனம்

செய்யப்பட்டு கிழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் எவ்வித விதித் தளர்வுகளும் அரசிடமிருந்து பெற தேவைப்படாதா நேர்வுகளில் மேலும் பணிவரன்முறைபடுத்துதல் தொடர்பான அனைத்து அசல் சான்றிதழ்கள்/ஆவணங்கள் முழுமையாக இருப்பின் அவர்களுக்கு பணிசார்ந்த தொடர் நடவடிக்கைகளை பணிநியமன அதிகாரி அளவில் முடித்து அதன் விவரத்தை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- காலம் தாழ்ந்த கல்வித்தகுதி ( அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய கல்வித்தகுதியை பூர்த்தி செய்திருக்க வேண்டும்)
- காலம் தாழ்ந்த விண்ணப்பம் ( அரசு ஊழியர் இறந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்)
- குறும வயது விண்ணப்பம் (கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய விண்ணப்பம் செய்யும் போது உரிய வயதினை பெற்றிருக்க வேண்டும்)

4) மேற்படி இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்வதற்காக அன்னாரின் மூலக்கோப்பினை பார்வையிட்டதில், தஞ்சாவூர் மாவட்டம், காவல் கட்டுப்பாட்டறையில் பணிபுரிந்து வந்த உதவி ஆய்வாளர், R.கோவிந்தராஜீ என்பவர் 03.08.2000 அன்று மறைந்து விட்டார். எனவே அவரின் மகன் திரு G.சிவகுமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 26.09.2000 அன்று மனு சமர்பித்துள்ளார். விண்ணப்பதாரர் விண்ணப்ப நாளில் பத்தாம் தேர்ச்சி பெற்றிருந்தார். எனவே அன்னாருக்கு கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளர் பணி 16.07.2010 அன்று வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு கணினி விவர பணியாளர் பதவியில் பணி வரண்முறையானது 16.07.2010 முற்பகல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கணினி விவர பதிவாளர் பணியில் இருந்து இளநிலை உதவியாளராக 11.05.2023 மு.ப பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

5) மனுதாரர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரும்போது தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769.சிஎஆர்1./2016 நாள் 21.12.17-ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படி பணிநியமனத்திற்குரிய கல்வித்தகுதியை பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் அவர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கு விண்ணபத்தினை மூன்று ஆண்டுகளுக்குள் 26.09.2000 அன்று சமர்பித்துள்ளார். அன்னார் அவ்விண்ணப்பம் அளிக்கும்போது உரிய வயதினையும் 24வயது/2000 பெற்றுள்ளார் எனவே அன்னாருக்கு பணிவரன்முறை செய்ய எவ்வித விதி தளர்வுகளும் அரசிடமிருந்து பெறத்தேவையில்லை. மேலும் அன்னாரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் சரிபார்க்கப்பட்டுள்ளது.

6) எனவே தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769.சிஎஆர்1./2016 நாள் 21.12.17-ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் வயது வரம்பு, கல்வி தகுதி ஆகியவற்றில் எவ்வித விதி விலக்குமின்றியும் அரசாணை நிலை எண்.560 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை நாள் 03.08.97 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில்

எந்தவித தளர்வும் அரசிடமிருந்து திரு G.சிவகுமார், இளநிலை உதவியாளர் என்பவருக்கு பெற தேவைப்படாத சூழ்நிலையில் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்த்தகுதியினை அன்னார் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர் இளநிலை உதவியாளர் பதவியில் 11.05.2023 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

7) செயல்முறை ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

ஒம்/. ஆஷிஸ் ராவத்
காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர்

பெறுநர்

திரு G.சிவகுமார், இளநிலை உதவியாளர்
மாவட்ட காவல் அலுவலகம்
தஞ்சாவூர்.

நகல்
காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை-4
கண்காணிப்பாளர், பணிப்பிரிவு-1, ஊதிய் நிர்ணயப்பிரிவு, கணிப்பொறி பிரிவு, துணைப்பட்டியல் பிரிவு, தண்டனை பிரிவு, விடுப்பு பிரிவு
இருப்புக் கோப்பு

// உ.ந.உ.ப //

கண்காணிப்பாளர்